# பரங்கிமலை மெட்ரோ ரயில் நிலையத்தில் வாகனங்கள் நிறுத்த கூடுதல் இடவசதி

சென்னை, அக். 2: பயணிகள் வசதிக்காக பரங்கிமலை மெட்ரோ ரயில் நிலையத்தில் வாகனங்கள் நிறுத்த கூடுதல் இடவசதி செய்யப்பட்டுள்ளது.

மெட்ரோ ரயில், புறநகர் ரயில் சேவையை பயன்படுத்தும் பயணிகளுக்கு இந்த வசதி செய்யப்பட்டுள்ளது.

இந்த வாகன நிறுத்த இடவசதி ரயில்வே சுரங்கப் பாதை நுழைவு வாயில், பரங்கிமலை மெட்ரோ ரயில் நிலையம் முன்பகுதியில் அமைந்துள்ளது. இங்கு பயணிகள் தங்கள் இருசக்கர வாகனங்கள், நான்கு சக்கர வாகனங்களை நிறுத்தி கொள்ளலாம் என மெட்ரோ ரயில்வே நிறுவனம் தெரிவித்துள்ளது.